**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No.53
(See Rule 42)

## DEPOSITION OF WITNESS

## CC.No.156/2020

PW-5

| | | | |
|---|---|---|---|
| Name | சதீஸ்குமார்(PW5) | | |
| Father's Name | சந்திரசேகர் | தொழில் | |
| Village | சேவூர் | | |
| Taluk | அவிநாசி | Age | 38 |
| District | திருப்பூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 07th **day of May 2026** by Thiru. K. Kulanthaivel, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused Present)*

**முதல் விசாரணை:-**

நான் மேற்படி முகவரியில் குடியிருந்து கொண்டு தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04.01.2020 தேதி காலை 10 மணி அளவில் நானும் என் நண்பர் சதீஷ் என்பவரும் லூர்துபுறம் பஸ் ஸ்டாப் அருகே உள்ள பிள்ளையார் கோவிலில் நின்று பேசிக்கொண்டிருந்தோம். ஆஜர் எதிரி யமஹா ஆர்15 வாகனத்தை தெற்கிலிருந்து வடக்காக அதிவேகமாக வந்தார். வளைவு திரும்பும் போது வாகனத்தை கண்ட்ரோல் செய்ய முடியாமல் வாகனத்தில் வந்த இருவரும் கீழே விழுந்து விட்டார்கள். பின்னால் உட்கார்ந்து இருந்த கிஷோர் என்பவர் தலையிலும் முகத்திலும் அடிபட்டு அந்த இடத்திலேயே இறந்து விட்டார். ஆஜர் எதிரிக்கும் தலையிலும் முகத்திலும் காயம் ஆகி இருந்தது. தனியார் ஆம்புலன்ஸ் மூலம் ஆஜர் எதிரியை சிகிச்சைக்கு அனுப்பி வைத்தோம். கிஷோரின் மொபைலை எடுத்து அவரது அப்பாவிற்கு ஃபோன் செய்து தகவல் சொன்னோம். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் என்னை காலை 11 மணி அளவில் விசாரித்தனர். என்னை விசாரித்த போது நானும் சதீஷ் மற்றும் அருகில் இருந்தவர்கள் இருந்தோம். நானும் புகார் கொடுப்பதற்காக ரவிச்சந்திரனுடன் சென்றேனா என்றால் இல்லை. பிள்ளையார் கோவில் தோட்டத்திற்கும் பிள்ளையார் கோவிலுக்கும் சுமார் 400 அடி தூரம் இருக்கும் என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கும் பிள்ளையார் கோவிலுக்கும் சுமார் 200 அடி

தூரம் இருக்கும் என்றால் சரிதான். அந்த ரோடு எஸ் பென்டாக இருக்கும் என்றால் சரிதான். தண்டுக்காரன்பாளையத்திலிருந்து செல்லும் போதும் புளியம்பட்டியில் இருந்து வரும் போதும் சாலை இறக்கமாக இருக்கும் என்றால் சரிதான். புளியம்பட்டியில் இருந்து வந்த பஸ் லாரியை ஓவர் டேக் செய்த போது தான் இருசக்கர வாகனம் மண் ரோட்டிற்கு சென்றது என்றால் இல்லை. நான் சம்பவ இடத்திலேயே இல்லை என்றும் லாரியை பஸ் ஓவர் டேக் செய்த போது தான் இந்த விபத்து நடந்தது என்றால் இல்லை. சம்பவ இடத்திற்கு நாங்கள் சென்ற பின்னால் சுமார் 10, 20 நபர்கள் வந்திருப்பார்கள். பின்னால் உட்கார்ந்து சென்ற நபர் ரோட்டில் விழுந்து விட்டார் வாகனத்தை ஓட்டி சென்ற நபர் பத்து, இருபது அடி தள்ளி கீழே விழுந்து விட்டார். பின்னால் உட்கார்ந்திருந்த நபர் தார் ரோட்டுக்கு அருகில் உள்ள மண் தடத்தில் விழுந்து இருந்தாரா என்றால் தார் ரோட்டில் இருந்து 10 அடி தள்ளி கீழே விழுந்திருந்தார். கிஷோரின் தகப்பனார் சம்பவ இடத்திற்கு அரை மணி நேரத்தில் வந்தார். எதிரியையும் கிஷோரையும் கிஷோரின் தகப்பனார் சம்பவ இடத்திற்கு வரும் முன்னரே ஆம்புலன்ஸ் மூலமாக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். நான் சம்பவ இடத்திலேயே இல்லை என்றும் கிஷோரின் தந்தை எனக்கு வேண்டப்பட்டவர் என்பதால் நான் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணைஇல்லை:**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>(Sd.) N.Keerthana<br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |